# காதிச் சபை அங்கத்தவர் ஒருவரை நியமித்தல் - 2025

## நீதிச்சேவை ஆணைக்குழு

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் காதிச் சபை அங்கத்தவர் ஒருவரை நியமிப்பதற்காக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அடிப்படைத் தகைமைகள்**

- இஸ்லாம் சமயத்தைச் சார்ந்த 40 வயதுக்கு மேற்பட்ட விவாகமான ஆணாக இருத்தல்
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக இருத்தல், அல்லது,
- முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக இருத்தல், அல்லது,
- கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக இருத்தல், அல்லது,
- சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்கு சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக இருத்தல், அல்லது,
- ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான அரச உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர். (நீதிச்சேவை உத்தியோகத்தர் தவிர)

**ஏனைய தகைமைகள்**

- விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றி ஒழுகுபவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக இஸ்லாமிய சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும், மதிப்பும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- தெரிவு செய்யப்படும் அபேட்சகர், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற காலப்பகுதிக்காக நியமனம் செய்யப்படுவார்.

**கொடுப்பனவுகள்**

காதிச் சபை அங்கத்தவர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 12,000/- நிரந்தரக் கொடுப்பனவாகவும் ஒவ்வொரு அமர்விற்கும் ரூபா 2,000/- வீதம் மாதமொன்றுக்கு ரூபா 8,000/- இற்கு மேற்படாத தொகை பிரயாணச் செலவாகவும் வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதி**

2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி

**விண்ணப்பிக்கும் முறை மற்றும் மேலதிக விபரங்கள்**

2025-01-31ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்.

அரச வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**சிரேஷ்ட உதவிச் செயலாளர்,**
**காதிப் பிரிவு,**
**நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,**
**த.பெ.இ - 573,**
**கொழும்பு 12.**
**0112433119 / 0112451159**